சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

அசல் வழக்கு எண்.139/2024

09.04.2026

வா.சா.2 திரு. ராமன், த/பெ. மகாலிங்கம்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் நிலம் வாங்கி விற்கும் தொழில் செய்யவில்லை. நான் 9 ஆம் வகுப்பு தேர்ச்சி பெறவில்லை. நான் 4, 5 ஆவணங்களில் பதிவு அலுவலகத்தில் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன். முதல்விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்களில் ஓரளவு தான் தெரியும். முதல்விசாரணையில் ஓரளவுக்கு நான் சொன்ன விவரங்களை தவிர மற்ற விவரங்களை அண்ணாதுரை சொன்னார் என்றால் சரிதான். முதல்விசாரணை வாக்குமூலம் எங்கு தட்டச்சு செய்யப்பட்டது என்று எனக்கு தெரியாது. முதல்விசாரணை வாக்குமூலத்தை நான் படித்து பார்க்கவில்லை. என்னிடம் படித்துக்காட்டவுமில்லை, கையெழுத்து போட சொன்னார்கள் அதனால் போட்டேன். தாவா சொத்தை அளவீடு செய்த போது நான் இருந்தேன். 2014 ஆம் வருடம் தாவா சொத்து அளக்கப்பட்டது. தாவா 14 ஆம் நம்பர் மனையில் எத்தனை சதுரடி என்றால் 1291 சதுரடி ஆகும். மனை எண் 19 லும் 1291 சதுரடி தான் ஆகும். மனை எண் 14 ல் 400 சதுரடி நீங்கலாக தான் கிரயம் பெற்றார். கிரய ஆவணத்தில் கண்ட நான்கெல்லை விவரம் எனக்கு தெரியாது. நான்முதல்விசாரணையில் சொல்லியுள்ளவாறு 400 சதுரடி வாதிக்கு இல்லை என்றால் சரியல்ல. வாதிக்கு மனை எண் 14 ல் 182 சதுரடி மட்டும் தான் உள்ளது என்றால் சரியல்ல. வாதி அண்ணாதுரை மனை எண் 14 ல் 699 சதுரடி மட்டுமே வைத்துள்ளார். மனை எண் 14 ல் 924 சதுரடியை பிரதிவாதி வாதிக்கு கிரயம் செய்துக்கொடுத்துள்ளார்என்றால் சரியல்ல. சாட்சி கையொப்பம் போட்ட கிரய ஆவணத்தில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் அண்ணாதுரைக்கு வேண்டியவர் என்பதால் அவர் தயாரித்த கொடுத்த முதல்விசாரணையின் அடிப்படையில் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.